தமிழ்நாடு முழுவதும் தினசரி பிரிண்ட் ஆகி வெளிவரும்
தினதமிழ்
நாளிதழுக்கு சேலம், கரூர், திருநெல்வேலி, விழுப்புரம், கடலூர், திருச்சி ஆகிய மாவட்டங்களுக்கு மாவட்டம் மற்றும் தாலுகா நிருபர்கள் தேவை. தொடர்புக்கு
9994466200–9080728304

தின தமிழ்
தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936
. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை
Whatsapp - ல்
பின் தொடர

dhinatamil.tn@gmail.com • மாற்றத்தின் ஆரம்பம் • www.dhinatamil.com • dhinatamil
.நாகர்கோவில் பதிப்பு . 30.12.2025 . மலர் 03 . இதழ் 360. செவ்வாய்க்கிழமை | dhinatamil | . NAGERCOIL EDITION . 30.12.2025 . VOL 03 . ISSUE 360. TUESDAY . 4 PAGES . Rs. 5

## திமுகவா? அதிமுகவா? தவெகவா? யாருடன் கூட்டணி?

# திரிசங்கு நிலையில் தேமுதிக

சென்னை, டிச.30-

சட்டசபை தேர்தலில் எந்த கூட்டணியில் சேருவது என்ற திரிசங்கு நிலையில் தேமுதிக தவிக்கிறது.

தமிழக சட்டசபைக்கு அடுத்த ஆண்டு(2026) தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் அரசியல் களம் சூடுபிடிக்கத் தொடங்கியிருக்கிறது.

தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே இருக்கும் நிலையில், பேரணி, பிரச்சாரம், பொதுக்கூட்டம் தொகுதிப் பங்கீடு குறித்த பேச்சுவார்த்தைகளைக் கட்சிகள் தொடங்கிவிட்டன.

தமிழக தேர்தல் களம் நான்கு முனைப் போட்டியாக அமைந்திருக்கிறது. திமுக கூட்டணி, அதிமுக கூட்டணி, தவெக, நாம் தமிழர் கட்சி என கட்சிகள் தனித்தனியே வியூகங்களை வகுத்து வருகின்றன.

இதில் அதிமுக-பாஜக கூட்டணி உறுதி செய்யப்பட்டது. திமுகவில் உள்ள தோழமைக் கட்சிகள் கூட்டணியில் தொடர்வதாக அறிவித்திருக்கிறது. நாம் தமிழர் கட்சியும் தனித்துப் போட்டியிடுவதாகக் கூறி வேட்பாளர்களை அறிவித்திருக்கிறது. ஆனால் அதிமுக கூட்டணியில் அங்கம் வகித்து வந்த தேமுதிக தனது நிலைப்பாட்டை தெரிவிக்காமல் உள்ளது.

கடந்த மாநிலங்களவை தேர்தலில் தங்கள் கட்சிக்கு ஒரு சீட் வேண்டும் என்று அதிமுகவிடம் பிரேமலதா விஜயகாந்த் கோரிக்கை வைத்திருந்தார். ஆனால், அதிமுக, தேமுதிக கேட்ட சீட்டை கொடுக்க மறுத்து விட்டது.

இதனால், அதிமுக மீது தேமுதிகவுக்கு அதிருப்தி நிலவி வந்தநிலையில் ஸ்டாலினை, பிரேமலதா விஜயகாந்த் நேரில் சந்தித்தது, விஜயகாந்தின் 2- ஆம் ஆண்டு நினைவு நாள் குருபூஜையில் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டது என திமுகவுடன், தேமுதிக நெருங்கி செல்வதையும் பார்க்க முடிகிறது. அதேசமயம் விஜயகாந்த் குருபூஜையில் கலந்துகொண்ட பாஜக மூத்த தலைவர்கள் தமிழிசை, பொன்.ராதா கிருஷ்ணன் ஆகியோர் ஆளும் கட்சியை எதிர்க்க எதிர்கட்சிகள் ஒன்றாக இணைய வேண்டும் என்றும் தேமுதிக தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைய வேண்டும் என்று பேசியிருந்தனர். விஜய்யும் மதுரை மாநாட்டில் விஜயகாந்த் குறித்து பேசியிருந்தார். நினைவு நாளன்று விஜயகாந்த் குறித்து பதிவு ஒன்றையும் பதிவிட்டிருந்தார்.



இப்படி கட்சிகள் தேமுதிகவை தங்கள் பக்கம் இழுக்க நினைக்கும் நிலையில் கூட்டணி குறித்து ஜனவரி 9 ஆம் தேதி கடலூரில் நடைபெறும் மாநாட்டில் அறிவிப்போம் என்று பிரேமலதா சொல்லியிருக்கிறார்.

## பரபரப்பான சூழலில் ஜனவரி 9ந்தேதி கடலூர் மாநாடு

இந்நிலையில் தேமுதிக மூன்று கட்சிகளின் கூட்டணி கதவைத் தட்டியிருக்கிறது. அதாவது திமுக கூட்டணி, அதிமுக- பாஜக கூட்டணி மற்றும் தவெக கதவைத் தட்டியிருக்கிறது. தேமுதிகவை பொறுத்தவரை அதிமுக - பாஜக கூட்டணியைத் தான் விரும்புவார்கள். அந்தக் கூட்டணியில் தான் அவர்கள் கேட்கும் சீட்கள் கிடைக்கும். அதுமட்டுமின்றி தொகுதி செலவு போன்ற விஷயங்கள் கிடைப்பதற்கான வாய்ப்புகளும் இருக்கும். தவெகவுடன் கூட்டணி வைத்தால் அதிக அளவில் சீட்டுகள் கிடைக்கும் ஆனால் தவெக கூட்டணி வெற்றி பெறுமா? என்று தெரியாது. அதனால் தேமுதிகவின் கடைசி சாய்ஸ் ஆகத்தான் தவெக இருக்கும். திமுக கூட்டணிக்கு சென்றார்கள் என்றால் அங்கு குறைவான சீட்டுகள் தான் கிடைக்கும். ஆனால் வெற்றி பெற வாய்ப்புகள் அதிகமாக இருக்கிறது.

அதிமுக- பாஜக கூட்டணிக்கு சென்றால் 10 சீட்டுகள் கொடுத்தால் அதில் இரண்டு சீட்டுகள் வெற்றி பெற வாய்ப்பு இருக்கிறது. எல்லா விஷயங்களையும் மனதில் வைத்து தேமுதிக கணக்கு போட்டுக்கொண்டிருக்கிறது. அதிமுக-பாஜக கூட்டணி எப்படியாவது தேமுதிகவை பிடித்து வலையில் போட்டுவிடலாம் என்று நினைக்கிறார்கள். அதேபோல திமுகவின் நோக்கம் என்னவாக இருக்கும் என்றால் அதிமுக-பாஜக கூட்டணியில் மற்ற கட்சிகள் சேரக் கூடாது. அந்தக் கூட்டணி பலவீனமாக இருக்க வேண்டும் என்று எண்ணி அங்கிருந்து ஆட்களை எப்படி பிரிக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள்.

அந்தவகையில் தேமுதிகவை தன் பக்கம் இழுக்க வேண்டும் என்று திமுக எண்ணுகிறது. ஆனால் தேமுதிக எதிர்பார்க்கின்ற சீட்டை திமுகவால் தர முடியாது. ஏனென்றால் திமுக கூட்டணியில் ஏற்கனவே கட்சிகள் அதிகமாக இருக்கின்றன. அதிமுக- பாஜக கூட்டணியில் தேமுதிக இணைந்தால் அங்கு அதிகமான இடம் கிடைக்கும். ஆனால் எல்லா இடங்களிலும் வெற்றி பெறுவார்களா? என்பது சந்தேகம் தான். இப்போதைய நிலையில் தேமுதிகவுக்கு வெற்றி பெறும் சீட்டுகள் வேண்டுமா? அல்லது அதிக சீட்டு வேண்டுமா? என்பதுதான் கேள்விக்குறியாக இருக்கிறது.

வெற்றி பெற்றால் போதும் என்று தேமுதிக கருதினால் திமுக கூட்டணியில் இடம் பெறலாம். இதற்கு சாதகமான சூழலும் கூட உள்ளது. தேமுதிகவில் குறிக்கோளில் மாநிலங்களவை சீட்டும் உள்ளது. தற்போது திமுகவில் சில மாநிலங்களவை இடங்கள் காலியாக உள்ள நிலையில் அடுத்த சில மாதங்களில் வர உள்ள மாநிலங்களவை தேர்தலில் தேமுதிகவுக்கு ஓரிரு இடங்களை தருவதன் மூலம் சட்டசபை தேர்தலில் கணிசமான இடங்களை திமுக குறைத்துக்கொள்ளவும் வாய்ப்பிருக்கிறது. தேர்தல் செலவை பொறுத்தமட்டில் திமுகவும் சளைத்தது அல்ல. கடந்த தேர்தல்களிலேயே கூட்டணி கட்சிகளின் தேர்தல் செலவுக்காக தாராளமாக திமுக நிதி வழங்கியிருக்கிறது. இந்த ஆப்ஷன் தேவை இல்லையென்றால் அதிமுக கூட்டணியில் இடம் பெறலாம்.

## மீண்டும் திமுக ஆட்சி - முதல்வர் ஸ்டாலின் உறுதி!

கோவை,டிச.30-

திமுக மேற்கு மண்டல மகளிர் அணி மாநாட்டில் முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின் பேசினார். அப்போது அவர் கூறியதாவது: மேற்கு மண்டல தி.மு.க. மகளிர் அணி மாநாட்டில் கூடியுள்ள மகளிரைப் பார்க்கும் போது, தி.மு.க. மீண்டும் ஆட்சிக்கு வருவது உறுதியாகத் தெரிகிறது. எப்போதுமே தி.மு.க. தேர்தல் அறிக்கையே ஹீரோ. வரும் சட்டமன்றத் தேர்தலில் மாபெரும் வெற்றியைப் பெறப் போகிறோம். அது உறுதி. பெண்களின் முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றம்; பெண்களின் வெற்றியே நாட்டின் வெற்றி. திரண்டுள்ள மகளிர் அணியைப் பார்க்கும் போதே பவர் ஃபுல்லாக இருக்கிறது. நிறைய இளம்பெண்கள் கூட்டத்தில் பங்கேற்றதைப் பார்க்கும் போது பெருமையாக இருக்கிறது. கூட்டம் பவர் ஃபுல்லாக மட்டும் இல்லை; உமன் பவரால் தி.மு.க. மீண்டும் ஆட்சிக்கு வருவதை உறுதி செய்வதாக உள்ளது. தொடக்கம் முதலே திராவிட இயக்கத்தில் பெண்கள் முக்கிய பங்கு வகித்து வருகின்றார்கள். பெண்கள் படிக்கக் கூடாது, அடுப்படி தாண்டக் கூடாது என்று கூறி அடிமைப் படுத்தப்பட்டனர். அதையெல்லாம் உடைத்தெறிந்தது திராவிட இயக்கம்தான். பெண்களின் முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றம்; பெண்களின் வெற்றியே நாட்டின் வெற்றி. பெரியார் கட்டியெழுப்பிய தமிழ்நாடு முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது. திராவிட இயக்கத்தால் பெண்கள் அடைந்த வளர்ச்சியை மற்றவர்களுக்கு சொல்ல வேண்டும். உள்ளாட்சியில் மகளிருக்கு இடஒதுக்கீடு வழங்கியது தி.மு.க. தான். உள்ளாட்சி அமைப்புகள் போல, சட்டமன்றத்திலும் நாடாளுமன்றத்திலும் பெண்களுக்கு இடஒதுக்கீடு வழங்க வேண்டும். பெண்களுக்கு இடம் கிடைப்பதை பாஜக விரும்பவில்லை. உரிமைத்தொகை திட்டம் நிறைய பெண்களுக்கு நம்பிக்கையைத் தந்துள்ளது. 1.30 கோடி மகளிருக்கு மாதந்தோறும் உரிமைத்தொகை வழங்கி வருகிறோம். ஒவ்வொரு குடும்பத்திற்கும் இதுவரை 28 ஆயிரம் ரூபாய் வழங்கியுள்ளோம். பெண்களின் கல்வி உரிமை மற்றும் சம உரிமைக்காக பாடுபடுவது திராவிட இயக்கம். கடந்த வாரம் ராஜஸ்தானில் ஒரு கிராமத்தில் பெண்கள் செல்போன் பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் தமிழ்நாட்டில் செல்போன்களை அசெம்பிள் செய்வதே பெண்கள்தான். தமிழ்நாட்டில்தான் பெண் மேயர்கள் அதிகமாக உள்ளனர். தேவையே இல்லாத நிபந்தனைகளுடன் 33 சதவீத இடஒதுக்கீட்டு மசோதாவை நாடாளுமன்றத்தில் பாஜக அரசு நிறைவேற்றியது. முதல்வரானதும் எனது முதல் கையெழுத்து 'விடியல்' பயணத் திட்டத்துக்குத்தான். புதிய வாய்ப்புகளைத் தேடி பெண்கள் ஏராளமானோர் விடியல் பயணம் மேற்கொள்கிறார்கள். பெண்கள் வேலைக்கு சென்றாலும், நடைமுறையில் இருக்கும் பெரிய சிறை சமையல் அறைதான். மகளிர் சுமையை குறைக்கும் திட்டமாக காலை உணவுத் திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது. பெண் கல்விக்கு தி.மு.க. அரசு முக்கியத்துவம் தந்துள்ளது. கல்விதான் யாராலும் திருட முடியாத சொத்து. 100 வேலை திட்டத்தை 125 நாட்களாக மத்திய அரசு உயர்த்தியதாக பச்சைபொய்யை எடப்பாடி பழனிசாமி கூறி வருகிறார். சங்கிகளே வெட்கப்படும் அளவுக்கு எடப்பாடி பழனிசாமி முட்டுக்கொடுக்கிறார். கமலாலய அறிக்கையை அதிமுக லெட்டர் பேடில் எடப்பாடி பழனிசாமி வெளியிடுகிறார்" இவ்வாறு அவர் பேசினார்.



மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம், சக்கிமங்கலம் ஊராட்சியில் உள்ள சமத்துவபுரம் நியாய விலைக் கடையில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் உணவு பொருட்களின் தரம் குறித்து மற்றும் இருப்பு குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன்குமார் ஆய்வு மேற்கொண்டார்.

நன்றி! நன்றி!! நன்றி!!!

சக்திதேவி அறக்கட்டளை
(சக்தி மசாலா நிறுவனங்களின் ஓர் அங்கம்)
ஈரோடு - 638 004.
SERVICE TO HUMANITY IS THE BEST WORK OF LIFE
SAKTHI MASALA

22.12.2025 ம் தேதி ஈரோடு, சக்தி துரைசாமி திருமண மாளிகையில் நடைபெற்ற
வாழ்நாள் சாதனையாளர் விருது, சேவை அமைப்புகளுக்கு நிதி உதவி,
மரங்களின் காவலர் விருது, கல்வி ஊக்கத்தொகை, உயர்கல்வி உதவித்தொகைகள்
வழங்கிய சக்திதேவி அறக்கட்டளையின் 26 வது ஐம்பெரும் விழாவில்
கௌரவ விருந்தினராக கலந்து கொண்டு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கியும், சேவை அமைப்புகளுக்கு நிதியுதவி மற்றும் மரங்களின் காவலர் விருதுகள் வழங்கி விழா பேருரையாற்றிய சென்னை உயர்நீதிமன்ற மேனாள் நீதியரசரும், கௌரவக் கொலை தடுப்பு ஆணையத்தின் தலைவருமான
திரு. K.N.பாட்ஷா அவர்களுக்கும்,
வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்று ஏற்புரையாற்றிய திருப்பூர் SKY குரூப் நிறுவனங்களின் தலைவரும், வனம் இந்தியா பவுண்டேசன் நிறுவனருமான திரு.SKY.V.சுந்தரராஜ் அவர்களுக்கும்,
குத்துவிளக்கேற்றிய திருமதி. சரோஜா சுந்தரராஜ் அவர்களுக்கும்,
பத்தாம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் முதல் மற்றும் இரண்டாம் இடம் பெற்ற மாணவ/மாணவிகளுக்கு கல்வி ஊக்கத்தொகை மற்றும் பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்றிய மாநில நிதிக்குழுவின் தலைவர்
திரு. கா.அலாவுதீன், இ.ஆ.ப., (பணிநிறைவு) அவர்களுக்கும்,
பனிரெண்டாம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் முதல் மற்றும் இரண்டாம் இடம் பெற்ற மாணவ / மாணவிகளுக்கு கல்வி ஊக்கத்தொகை மற்றும் பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்றிய கோவை, சிறுதுளி அமைப்பின் அறங்காவலர்
திருமதி. வனிதா மோகன் அவர்களுக்கும்,
உயர்கல்வி உதவித்தொகை வழங்கி வாழ்த்துரை வழங்கிய திண்டல் பாரதி வித்யாபவன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி தாளாளர்
டாக்டர் L.M.ராமகிருஷ்ணன் அவர்களுக்கும்,
மற்றும் முக்கிய விருந்தினர்களுக்கும், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும், மாணவ, மாணவிகளுக்கும், பெற்றோர்களுக்கும், பத்திரிக்கை, ஊடகத் துறையை சார்ந்த நண்பர்களுக்கும், எங்களுக்கு ஆதரவு கொடுக்கும் வாடிக்கையாளர்கள், விற்பனையாளர்கள், இல்லத்தரசிகள் மற்றும் அனைத்து துறையை சார்ந்தவர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.
இப்படிக்கு
முனைவர் P.C.துரைசாமி - முனைவர் சாந்தி துரைசாமி
குடும்பத்தினர் மற்றும் பணியாளர்கள்
சக்தி மசாலா நிறுவனங்கள், சக்திதேவி அறக்கட்டளை, ஈரோடு.
துளி

# 'கதறிய' அய்யா!

### @ சில்லறை பசங்களை வைத்து அவமானப்படுத்துகிறார் அன்புமணி
### @ மருமகள் நீக்கம் - மகளுக்கு பதவி



சென்னை, டிச.30-

"நான் அன்புமணியை சரியாக வளர்க்கவில்லை. அவர் என்னை மார்பிலும், முதுகிலும் ஈட்டியால் குத்துகிறார். ஒவ்வொரு நாளும் சில நபர்களை வைத்து என்னை அவமானப் படுத்துகிறார் அன்புமணி" என பாமக நிறுவனர் ராமதாஸ் கண்ணீர் மல்க தெரிவித்தார்.

ராமதாஸ் தலைமையிலான பாமக சார்பில் இன்று சேலத்தில் செயற்குழு மற்றும் பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது. இந்த பொதுக்குழு கூட்டத்தில் பாமக தலைவராக அக்கட்சியின் நிறுவனர் ராமதாஸ் தேர்வு செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதுமட்டுமின்றி பசுமை தாயகம் அமைப்பின் தலைவர் பதவியில் இருந்து சவுமியா அன்புமணியை நீக்கி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும், ராமதாஸின் மூத்த மகள் ஸ்ரீகாந்திமதியை பாமக செயல் தலைவராகவும், பசுமை தாயகம் அமைப்பின் தலைவராகவும் தேர்வு செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதேபோல 2026 சட்டப்பேரவை தேர்தல் கூட்டணியை இறுதி செய்யும் அதிகாரத்தை ராமதாஸுக்கு அளித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பாமக நிறுவனர் ராமதாஸ் பேசுகையில், "சட்டப்பேரவைத் தேர்தல் கூட்டணி குறித்து உரிய நேரத்தில் சரியான முடிவெடுத்து அறிவிப்பேன். 10.5 சதவீத இடஒதுக்கீட்டை உறுதியாக பெறுவோம். அன்புமணி தலைமையிலான கும்பல் என்னையும், ஜி.கே.மணியையும் அத்தனை இழிவாக தூற்றுகிறார்கள். என்னைக் கொல்வதாக பதிவு போட்டவருக்கு அன்புமணி பொறுப்பு கொடுக்கிறார். நான் அன்புமணியை சரியாக வளர்க்கவில்லை. அவர் என்னை மார்பிலும், முதுகிலும் ஈட்டியால் குத்துகிறார்.

நான் அவருக்கு ஒரு குறையும் வைக்கவில்லை. அவர் என்னை துண்டுத் துண்டாக வெட்டிப் போட்டிருந்தால் கூட நான் போய் சேர்ந்திருப்பேன். ஆனால், ஒவ்வொரு நாளும் சில்லறை பசங்களை வைத்து என்னை அவமானப் படுத்துகிறார் அன்புமணி. அன்புமணி ஏன் இவ்வளவு அவசரப்படுகிறார், இன்னும் சில ஆண்டுகள் பொறுமையாக இருக்கக்கூடாதா என பலரும் இப்போது கேட்கிறார்கள். செயற்குழு, பொதுக்குழுவை பார்க்கும் போது 95 சதவீத பாமகவினர் என் பின்னால்தான் உள்ளனர் என்பது தெரிகிறது. அவர் பக்கம் 5 சதவீதம் பேர் கூட இல்லை. ஆனாலும், கோடிக்கணக்கில் செலவு செய்து பம்மாத்து காட்டுகிறார்.

இந்தத் தேர்தலில் நான் நல்ல கூட்டணியை அமைப்பேன். அந்தக் கூட்டணி மகத்தான வெற்றியை பெறும். நான் மாவட்ட செயலாளர்கள், நிர்வாகிகளுடன் யாருடன் கூட்டணி வைக்கலாம் என கருத்துகளை கேட்டேன். அவர்கள் சொன்ன கருத்தின் அடிப்படையில் கூட்டணியை அமைப்பேன்.

கூட்டணி அமைப்பதற்கான நேரம் இன்னும் கனியவில்லை. சில நேரங்களில் தூக்க மாத்திரை போட்டால்கூட தூக்கம் வருவதில்லை. ஆனால் பாட்டாளி சொந்தங்களை நினைக்கும்போது புத்துணர்ச்சி வருகிறது" என்று கூறினார். இந்த பேச்சின்போது ஒரு கட்டத்தில் உணர்ச்சி வசப்பட்டு கண்ணீர் விட்டு ராமதாஸ் அழுததால் பரபரப்பு ஏற்பட்டது.




திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டையை அடுத்த சிலுக்குவார்பட்டியில் "நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாம் நடைபெற்றது" வட்டார மருத்துவ அலுவலர் வினோத் தலைமையில் நடைபெற்ற முகாமை திமுக ஒன்றிய செயலாளர் வழக்கறிஞர் சௌந்தரபாண்டியன் தொடங்கி வைத்தார்,முகாமில் இரத்தஅழுத்தம், உயர்இரத்த அழுத்தம்,கண்காது,தலை,ணிசிநி,ஸ்கேன்,எக்சரே உட்பட உடல் முழு பரிசோதனை செய்யப்பட்டது, இதனால் சிலுக்குவார்பட்டி, கரியாம்பட்டி,மன்னவராதி, பழையசிலுக்குவார்பட்டி,பள்ளப்பட்டி, உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்

# கோவை அகில இந்திய ரியல் எஸ்டேட் கூட்டமைப்பின் 2026-27 ஆம் ஆண்டிற்கான கோவை மாவட்ட புதிய நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்




கோவை, டிச.30-

அகில இந்திய ரியல் எஸ்டேட் கூட்டமைப்பின் நிறுவனர் தலைவர் டாக்டர் ஹென்றி மற்றும் தேசிய ஆலோசனை குழு தலைவர் நேரு நகர் நந்து ஆகியோரின் ஆலோசனையின் பேரில் எட்டாவது நிர்வாக தேர்வாக நடைபெற்ற இதில்,தேசிய செயல் செயலாளர் செந்தில் குமார் தலைமை தாங்கினார்.

தேசிய இணை செயலாளர் கண்ணன் என்கிற பாலசண்முகம் மற்றும் தேசிய துணை செயலாளர் பாலசுப்ரமணி,ஆலோசனை குழு உறுப்பினர் நிவாஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.முன்னதாக ஃபெயிரா கூட்டமைப்பில் புதிதாக இணைந்த உறுப்பினர்களை தேசிய செயல் செயலாளர் செந்தில் குமார் அறிமுகம் செய்து வைத்தார்.தொடர்ந்து நிகழ்ச்சியில் ,ஃபெயிரா கூட்டமைப்பின் பல்வேறு செயல்பாடுகள் குறித்து புதிதாக இணைந்த உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகளிடையே பேசினார்.

இதில், ரியல் எஸ்டேட் துறையில் தொழில் செய்து வரும் தொழில் துறையினருக்கு ஃபெயிரா எப்போதும் உடன் இருக்கும் என உறுதி தெரிவித்தார்.தொடர்ந்து புதிய உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகளுக்கு தகவல் அறியும் உரிமை சட்டம் குறித்த கையேடு வழங்கப்பட்டது.

கூட்டத்தில் புதிய மாவட்ட தலைவராக அந்தோணி சாமி,பொது செயலாளர் மெடிக்கல் நாராயணன்,மாவட்ட செயல் செயலாளர் ஜெகந்நாதன் ,செயலாளர் மாவட்ட வளர்ச்சி சண்முகம் உட்பட 30 க்கும் மேற்பட்ட புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர்.நிகழ்ச்சியை ஃபெயிரா கூட்டமைப்பின் ஆர்க்கிடெக்ட் மற்றும் பொறியாளர் குழுவின் மாநில செயற்குழு உறுப்பினர் பொறியாளர் தேஜஸ்வினி தொகுத்து வழங்கினார்.

கூட்டத்தில் மாநில துணை தலைவர் சுரேஷ்குமார்,மாநில செயற்குழு தலைவர் ராமநாதன்,கோவை மாவட்ட தலைமை நிலைய செயலாளர் கிருஷ்ணமூர்த்தி,கனலி என்கிற சுப்பு செந்தில் குமார் உட்பட தேசிய,மாநில,மாவட்ட நிர்வாகிகள், உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.

# விளாத்திகுளத்தில் த.வெ.க சார்பில் வீர மங்கை வேலுநாச்சியாருக்கு மரியாதை



விளாத்திகுளம், டிசம்பர். 30-

இந்திய சுதந்திர போராட்டத்தின் முதல் பெண் வீரமங்கை இராணி வேலு நாச்சியார் நினைவு தினத்தை முன்னிட்டு தமிழக முழுவதும் பல்வேறு அரசியல் கட்சியினர் மற்றும் சமூக அமைப்புகள், பொதுமக்கள் என பலதரப்பினர் ராணி வேலு நாச்சியார் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து, மலர்கள் தூவி மரியாதை செலுத்தி வருகின்றனர். அந்த வகையில் தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதி தமிழக வெற்றி கழகத்தின் சார்பில், தூத்துக்குடி வடகிழக்கு மாவட்ட த.வெ.க இணைச் செயலாளர் பொன் காசிராம் தலைமையில் கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் ஏராளமானோர் விளாத்திகுளம் பேருந்து நிலையம் முன்பு வைக்கப்பட்டிருந்த வீர மங்கை வேலு நாச்சியாரின் திரு உருவப்படத்திற்கு மாலை அணிவித்து, மலர்கள் தூவி அஞ்சலி செலுத்தினர்.

இந்நிகழ்வில், மாவட்டத் துணைத் தலைவர் முருகேஸ்வரி, மாவட்ட செயற்குழு உறுப்பினர் அழகு சௌந்தரி, கீர்த்தி, ராகிணி, மாவட்ட பொருளாளர் ஸ்ரீ பாலகிருஷ்ணன்,புதூர் ஒன்றிய பொறுப்பாளர் செண்பகக்கனி, விளாத்திகுளம் மேற்கு ஒன்றிய பொறுப்பாளர் விஜயகுமார், விளாத்திகுளம் கிழக்கு ஒன்றிய பொறுப்பாளர் தங்க மாரியப்பன், மாவட்ட செயற்குழு உறுப்பினர் முத்துராமலிங்கம், ரவிக்குமார், விளாத்திகுளம் நகரப் பொருளாளர் முத்துராமலிங்க சேதுபதி, விளாத்திகுளம் நகர மகளிரணி தேவி, மாவட்ட வழக்கறிஞர் அணி சண்முகராஜ் மற்றும் நிர்வாகிகள் பாண்டியராஜ், பேச்சிமுத்து, சந்தோஷ் குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# மேட்டுப்பாளையம் நகர அதிமுக சார்பில் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆரின் 38ஆம் ஆண்டு நினைவு தினம் அனுசரிப்பு!




கோவை, டிச.30-

கோவை புறநகர் வடக்கு மாவட்டம், மேட்டுப்பாளையம் தொகுதி, மேட்டுப்பாளையம் பஸ் நிலையம் அருகே அதிமுக நகர கழகம் சார்பில் மறைந்த முன்னாள் முதல்வரும் அதிமுக நிறுவனருமான புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் 38 ஆம் ஆண்டு நினைவு தினம் அனுசரிப்பு மேட்டுப்பாளையம் நகர செயலாளர் வான்மதி சேட் தலைமையில் நடைபெற்றது. இதில் வடக்கு மாவட்ட செயலாளர் எம்.எல்.ஏ., பி.ஆர்.ஜி.அருண் குமார், அமைப்பு கழகச் செயலாளர் மேட்டுப்பாளையம் எம்.எல்.ஏ., ஏகே செல்வராஜ், மாவட்ட துணை செயலாளர் பி.டி.கந்தசாமி, மாவட்ட அம்மா பேரவை செயலாளர் நாசர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு அங்கு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த புரட்சித் தலைவரின் திருவுருவப்படத்திற்கு மலர் மாலையிட்டு மலர் தூவி புகழஞ்சலி செலுத்தினார்கள். நிகழ்வில் உடன் மாவட்ட, நகர மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள், பொது மக்கள் கலந்து கொண்டு அவரது புகழை போற்றி மலரஞ்சலி செலுத்தினார்கள்.

உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை
Whatsapp-ல்
பின் தொடர

# சிவகங்கையில் ராணி வேலுநாச்சியார் 229 வது நினைவு நாள் விழா



சிவகங்கை, டிச.30-

வெள்ளையர்களை எதிர்த்து சிவகங்கைச் சீமையை மீட்டெடுத்த பெருமை ராணி வேலுநாச்சியாரை சாரும் . ராணி வேலு நாச்சியாரின் நினைவிடம் சிவகங்கை அரண்மனை வாசலில் சண்முகராஜா கலையரங்கத்தின் வடபுறம் அமைந்துள்ளது. இந்த நினைவிடத்தில் ராணி வேலுநாச்சியாரின் 229- வது நினைவு தின விழா கொண்டாடப்பட்டது. விழாவின் தொடக்கமாக வேலு நாச்சியாரின் உருவச் சிலைக்கு ராணி வேலுநாச்சியார் அறக்கட்டளை நிர்வாகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

இதன் பின்னர் அவர்கள் கொட்டுமேளம் முழங்க ஊர்வலமாகச் சென்று வேலுநாச்சியார் நினைவிடத்தில் மலர்வலையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்கள். இதில் சிவகங்கை அண்ணாமலை நகரில் உள்ள வேலுநாச்சியார் அறக்கட்டளை நிர்வாகத்தினரும் நாலு கோட்டையில் உள்ள ராணி வேலுநாச்சியார் அறக்கட்டளை நிர்வாகத்தினர்களும் சேர்ந்து அஞ்சலி செலுத்தினார்கள். இதனைத் தொடர்ந்து சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம் பரம்பரை அறங்காவலர் ராணி மதுராந்தகி நாச்சியார் மற்றும் சிவகங்கை சமஸ்தானத்தின் இளைய மன்னர் ராஜ்குமார் ஆர். மகேஸ்துரை ஆகியோர் நினைவிடத்தில் மலர்வலையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

உத்தமனூர் ஸ்ரீமது முத்துவிஜயரெகுநாத துரைசிங்க கௌரி வல்லவத் தேவர் வாரிசுதாரர்களில் குழந்தை ராணி நாச்சியார் அவர்கள் வேலுநாச்சியாரின் உருவச் சிலையில் பால் ஊற்றி அபிஷேகம் செய்து வழிபட்டார். மறவர் நல சங்கத்தின் சார்பில் வேலு நாச்சியார் நினைவாக பொங்கல் வைத்து ஆதரவற்றோர் இல்லத்தில் 100 பேருக்கு உணவு மற்றும் உடைகளை வழங்கினார்கள்.

இதன் பின்னர் இவர்கள் சிவகங்கை அரண்மனை வாசலின் முன்பு பொதுமக்களுக்கு இனிப்பு மற்றும் சுண்டல்களை வழங்கினார்கள். தொடர்ந்து மாலை 4 மணி வரை அனைத்துக் கட்சிகளின் பிரமுகர்களும், சமுதாயத் தலைவர்களும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினார்கள் . விழாவிற்கான ஏற்பாடுகளை ராணி வேலுநாச்சியார் அறக்கட்டளை நிர்வாகத்தினர் சிறப்பாகச் செய்தி ருந்தனர்.

# தஞ்சாவூரில் எம்ஜிஆர் சிலைக்கு அதிமுகவினர் மாலை அணிவிப்பு




தஞ்சாவூர் டிசம்பர். 30-

எம்ஜிஆர் நினைவு நாளை யொட்டி தஞ்சாவூரில் அவருடைய சிலைக்கு அதிமுக தொண்டர்கள், அமமுக , ,உரிமை மீட்பு கழகம் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது

மறைந்த முன்னாள் முதலமைச்சர் எம்ஜிஆர் 38 ஆம் ஆண்டு நினைவு தினம் அனுசரிக்கப்பட்டது இதை யொட்டி அதிமுக சார்பில் அண்ணா சிலை அருகில் இருந்து ஊர்வலம் புறப்பட்டு, மத்திய மாவட்ட அதிமுக செயலாளர் சேகர் தலைமை தாங்கினார்

கொள்கை பரப்பு துணை செயலாளரும், மாநகர செயலாளருமான சரவணன், பகுதி செயலாளர் மனோகர், புண்ணிய மூர்த்தி, சதீஷ்குமார், பஞ்சு ஆகியோர் முன்னிலை வகித்தனர் ஊர்வலம் காந்திஜி சாலை இரவின் பாலம் வழியாக ரயிலடியை வந்து அடைந்தது .அங்குள்ள எம்ஜிஆர் , ஜெயலலிதா சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்

இந்நிகழ்ச்சியில் மாநில அமைப்பு செயலாளர் காந்தி, கொள்கை பரப்பு துணை செயலாளர் துரை. திருஞானம், விவசாயப் பிரிவு இணை செயலாளர் ராஜமாணிக்கம், துணை செயலாளர் சிங் ஜெகதீசன் எம் ஜி ஆர் மன்ற இணை செயலாளர் துரை வீரணன் ,நீலகிரி ஊராட்சி முன்னாள் செயலாளர் பாஸ்கரன், மருத்துவ பிரிவு இணைச்செயலாளர் துரை. கருணாநிதி ,தலைமை செயற்குழு உறுப்பினர் சாவித்திரி கோபால் மாவட்ட அவைத் தலைவர் நாகராஜன் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

அமமுக சார்பில் தஞ்சாவூர் தலைமை தபால் நிலையம் அருகில் இருந்து மாநகர மாவட்ட செயலாளர் ராஜேஸ்வரன் தலைமையில் ,மாநில விவசாய பிரிவு இணைச்செயலாளர் தனசேகர், அவை தலைவர் விருத்தாச்சலம், ஒன்றிய செயலாளர் மோகன், கோவி. மனோகரன் ஆகியோர் முன்னிலை யில் ஊர்வலம் வந்து எம்ஜிஆர் மற்றும் ஜெயலலிதா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர் .நிகழ்ச்சியில் பகுதி செயலாளர் செந்தில்குமார், பாஸ்கர் ,வக்கீல் செந்தில் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர் பின்னர் பொது மக்களுக்கு அன்னதானம் வழங்கினர்

. அதிமுக தொண்டர்கள் உரிமை மீட்பு கழகத்தின் சார்பில் பகுதி செயலாளர் சண்முக பிரபு தலைமையில் , ஓய்வு பெற்ற போலீஸ் அதிகாரி தவமணி, துரை, மாநகராட்சி எதிர்க்கட்சித் தலைவர் மணிகண்டன் ,ஒன்றிய செயலாளர் சத்தியராஜ், மணிவண்ணன், பாவா அரசு ,செந்தில், பாலா ஆகியோர் முன்னிலை வகித்தனர் .எம்ஜிஆர் மற்றும் ஜெயலலிதா சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்

இந்நிகழ்ச்சியில் பகுதி செயலாளர் ரமேஷ் ,சாமி நாதன், மகளிர் அணி செயலாளர் அமுதா ரவிச்சந்திரன், இணை செயலாளர் டாரத்தி , .அண்ணா தொழிற் சங்க மாவட்ட இணை செயலாளர் வீர ராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# திருத்துறைப்பூண்டி வர்த்தகர் சங்க தேர்தலில் எம்.வி.கே.செந்தில் 11-வது முறையாக தலைவராக தேர்வு



திருத்துறைப்பூண்டி, டிசம்பர்.30-

திருவாரூர் மாவட்டம் திருத்துறைப் பூண்டி வர்த்தகர்கள் சங்க 62-ஆம் ஆண்டு விழா மற்றும் 2026 ஆம் ஆண்டு நிர்வாகிகள் தேர்தல் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு தலைவர் செந்தில்குமார் தலைமை வகித்தார். செயலாளர் நாராயணமூர்த்தி ஆண்டு அறிக்கை வாசித்தார். பொருளாளர் தினகரன் வரவு செலவு கணக்கை வாசித்தார். விழாவில் துணை தலைவர் ஷேக் மன்சூர், துணை செயலாளர் தணிகாசலம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். 2026ம் ஆண்டு புதிய நிர்வாகிகள் தேர்தல், சங்க சட்ட ஆலோசகர் வக்கீல் அரசு முன்னிலையில் நடைபெற்றது.

இதில் புதிய நிர்வாகிகளாக தலைவர் செந்தில்குமார், செயலாளர் நாராயணமூர்த்தி, பொருளாளர் தினகரன், துணை செயலாளர் தணிகாசலம், துணை தலைவர் ஷேக் மன்சூர் ஆகியோர் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

கொருக்கை கால்நடை பண்ணையில் மிகுதியாக உள்ள இடத்தில், விவசாயக் கல்லூரி அல்லது கால்நடை மருத்துவக் கல்லூரி துவங்க வேண்டும், திருத்துறைப் பூண்டி வர்த்தக சங்க நிர்வாகிகள் அனைவரும் மீண்டும் போட்டியின்றி ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர். வர்த்தக சங்க தலைவர் செந்தில்குமார் தொடர்ந்து 11-வது முறையாக தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடதக்கது. 62-வது ஆண்டு விழாவில் பல்வேறு முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. குறிப்பாக, திருத்துறைப்பூண்டி, நாகப்பட்டினம், வேளாங்கண்ணி ரயில் பாதை பணியை விரைவில் முடிக்க வேண்டும். அகஸ்தியம்பள்ளி, திருத்துறைப்பூண்டி, திருவாரூர் ரயில் பாதையை விரைவில் மின்மயமாக்கும் பணியை முடித்து, மின்சார ரயிலை இயக்க வேண்டும். காரைக்குடி முதல் சென்னை வரை திருத்துறைப்பூண்டி திருவாரூர் வழியாக கம்பன் விரைவு வண்டியை இரு மார்க்கமாகவும் மீண்டும் இயக்கவேண்டும் என வலியுறுத்தப்பட்டது. புதிதாக தேர்வு செய்யப்பட்ட நிர்வாகிகளுக்கு அரசியல் கட்சி தலைவர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

தின தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள் !

# திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை தாலுகாவில் இந்திய ஜக்கிய கம்யூனிஸ்ட் கட்சியினர் இலவச வீட்டுமனை பட்டா கேட்டு வட்டாட்சியர் அலுவலகம் முற்றுகை




நிலக்கோட்டை, டிச.30-

நிலக்கோட்டையில் ஆதிதிராவிட பொதுமக்களுக்கு இலவச வீட்டு மனை பட்டா கேட்டு இந்திய ஜக்கிய கம்யூனிஸ்ட் கட்சியினர் சார்பில்,100-க்கும் மேற்பட்ட பொதுமக்கள், வட்டாட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டையில்,இந்திய ஜக்கிய கம்யூனிஸ்ட் கட்சியினர் சார்பில், நிலக்கோட்டை மற்றும் அதனை சுற்றியுள்ள கிராம பகுதிகளில் வசிக்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின பொதுமக்களுக்கு இலவச வீட்டு மனை பட்டா வழங்க கோரி வட்டாட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர்,

போராட்டத்திற்கு மாவட்ட பொறுப்பாளர் சத்யவாணி தலைமை வகித்தார் ,மாவட்ட செயலாளர் கணேசன்,தேனி மாவட்ட செயலாளர் கோபால் ஆகியோர் முன்னிலை வகித்தனர்,மாவட்ட குழு உறுப்பினர் காளீஸ்வரி வரவேற்றார்,

நால்ரோட்டில் தொடங்கி ஊர்வலமாக சென்ற போராட்டகாரர்கள்,ஆங்கிலேயர் அரசால் வழங்கப்பட்ட பஞ்சமி நிலங்கள் மற்றும் பூமிதான நிலங்களை மீட்டு அந்தந்த பகுதியில் வசிக்கும் ஆதிதிராவிட மக்களுக்கே தலா இரண்டு செனட் வீதம் இலவச வீட்டு மனை பட்டாக்களை வழங்க வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பி தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டக்காரர்களுடன் வட்டாச்சியர் ஜெயபிரகாஷ் நடத்திய பேச்சுவார்த்தையை அடுத்து,அவர்களின் கோரிக்கையை நிறைவேற்றுவதாக உறுதியளித்ததை அடுத்து அனைவரும் கலைந்து சென்றனர்

# பள்ளி ஆசிரியர்கள், தலைமை ஆசிரியர்களுக்கான தொழில்முனைவு திறன் மேம்பாட்டு பயிற்சி முகாம்



கோவை, டிச.30-

வளர்ந்துவரும் இந்தியாவிற்கான பிரதான் மந்திரி பள்ளிகள் திட்டத்தினைச் சார்ந்த பள்ளிகளின் ஆசிரியர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்களுக்கு இரண்டாம் கட்டமாக நடைபெற்று வருகின்ற 3 நாட்கள் புதுமை,வடிவமைப்பு மற்றும் தொழில்முனைவு திறன் மேம்பாட்டு பயிற்சி முகாம் டிச. 22ம் தேதி முதல் 24ம் தேதி வரை நடைப்பெற்றது.

கோவை இரத்தினம் தொழில்நுட்ப வளாகத்தில் உள்ள இரத்தினம் கிராண்ட் அரங்கில் ஏஐசி ரைஸ் சார்பாக இந்திய அரசின் பள்ளிக் கல்வி மற்றும் எழுத்தறிவு துறை , அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி கழகம் மற்றும் கல்வி அமைச்சகத்தின் புதுமைத் துறைசார் பிரிவு ஆகியவை இணைந்து முகாமை நடத்தியது.

வாத்வானி ஃபவுண்டேஷன் உடன் இணைந்து இப்பயிற்சி முகாம் நடைப்பெற்றது. இந்த திறன் மேம்பாட்டு பயிற்சி முகாமை,அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி கழக பிராந்திய ஒருங்கிணைப்பாளர் நந்தஜித் ராபா, வாத்வானி ஃபவுண்டேஷன்-ஐச் சேர்ந்த ஸ்வேதா மற்றும் விவேக்குமார் ஆகியோர் இணைந்து டிச.22ம் தேதி தொடங்கி வைத்தனர்.

இப்பயிற்சி,நாடு முழுவதும் 25 மாநிலங்கள் மற்றும் 2 யூனியன் பிரதேசங்களில் கட்டங்களாக நடத்தப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக இரத்தினம் தொழில்நுட்ப வளாகத்தில் நடைபெற்ற மாநில அளவிலான தொடக்க விழாவில், இரத்தினம் குழுமத்தின் தலைவர் டாக்டர். மதன் ஏ செந்தில், இரத்தினம் கல்வி குழுமத்தின் தலைமை நிர்வாக அதிகாரி டாக்டர். மாணிக்கம் மற்றும் இரத்தினம் குழுமத்தின் தலைமை வணிகப் பிரிவு தலைவர் டாக்டர்.நாகராஜ் பாலக்கிருஷ்ணன் மற்றும் ஏஐசி ரைஸ்-ன் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் சிறப்பு விருந்தினர்கள் கலந்து கொண்டனர்.இந்த நிகழ்ச்சியின் முதன்மை விருந்தினராக,சென்னை மண்டல மத்திய வித்யாலய சங்கத்தின் துணை ஆணையர் டாக்டர் ஆர்.செந்தில்குமார் கலந்து கொண்டு பயிற்சி முகாமைத் தொடங்கி வைத்தார்.

இப்பயிற்சி முகாமில் தமிழ்நாடு மற்றும் கேரளா மாநிலங்களைச் சேர்ந்த 190-க்கும் மேற்பட்ட பிரதான் மந்திரி பள்ளிகள் திட்டத்தினைச் சார்ந்த பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் உற்சாகமாக கலந்து கொண்டனர். பயிற்சி முகாமின் போது குழு செயல்பாடுகள்,அனுபவ அடிப்படையிலான பயிற்சிகள், கலந்துரையாடல் அமர்வுகள் மற்றும் செயல்முறை பயிற்சி வகுப்பு ஆகியவை இடம்பெறுகின்றன.



மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார், தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்ற போது எடுத்த படம்.

# மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் தூய்மை பணியாளர்களுக்கு நலவாரிய அட்டை : ஈரோடு ஆட்சியர் கந்தசாமி வழங்கினார் !



ஈரோடு, டிச. 30-

ஈரோடு மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி தலைமையில் நடைபெற்றது.

இதில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, விதவை உதவித்தொகை, கருணை வேலை. அடிப்படையில் மாற்றுத் திறனாளிகளுக்கு கல்வி உதவித்தொகை, இலவச வீட்டுமனை பட்டா, பட்டா மாறுதல், விலையில்லா தையல் இயந்திரம், ஆக்கிரமிப்பு மற்றும் காவல் துறை நடவடிக்கை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் என மொத்தம் 210 மனுக்கள் வரப்பெற்றன. பொதுமக்கள் அளித்த பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் பெற்று உரிய துறை அலுவலர்களிடம் வழங்கி அவற்றின் மீது உடனடி நடவடிக்கை எடுத்திட உத்தரவிட்டார். மேலும் முதலமைச்சர் தனிப்பிரிவு மனுக்கள், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்பட்ட மனுக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டார். மேலும் ஆட்சியர் தாட்கோ சார்பில் 2 நபர்களின் வாரிசுதார்களுக்கு இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித்தொகை தலா .25,000 வீதம் ரூ.50,000 காசோலையினை வழங்கினார். மேலும், 8 நபர்களுக்கு தமிழ்நாடு தூய்மைப்பணியாளர் நலவாரியத்தின் மூலம் உறுப்பினர் அடையாள அட்டையும் வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் சாந்த குமார் மற்றும் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

# தேசிய கால்நடை நோய்த்தடுப்பு திட்டம் கோமாரி நோய் தடுப்பூசி 8- வது சுற்று முகாமை துவக்கி வைத்தனர் !



கிருஷ்ணகிரி, டிச.30-

கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டிணம் ஊராட்சி ஒன்றியம், கூரம்பட்டி ஊராட்சியில் கால்நடை பராமரிப்புத்துறை சார்பாக, தேசிய கால்நடை நோய்த்தடுப்பு திட்ட கோமாரி நோய் தடுப்பூசி 8 வது சுற்று முகாமை மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் , பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் .தே.மதியழகன் ஆகியோர் துவக்கி வைத்தனர்.

மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது:


கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள 3,26,480 மாட்டின கால்நடைகளுக்கு, தேசிய கால்நடை நோய் தடுப்புத் திட்டத்தின் கீழ் 8-வது சுற்று பாத அண்ட் மௌத் டீசஸ் வச்சின்) கால் மற்றும் வாய் நோய் தடுப்பூசி முகாம் காவேரிப்பட்டிணம் ஊராட்சி ஒன்றியம், எருமாம்பட்டி கிராம ஊராட்சிக்குட்பட்ட கூரம்பட்டி கிராமத்தில் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இன்று கூரம்பட்டி கிராமத்தில் நடைபெற்ற முகாமில் 210 கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது. மேலும், இத்தடுப்பூசி முகாம் 29.12.2025 முதல் 28.01.2026 வரை ஒரு மாத காலம் நடைபெற உள்ளது.

மேலும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராமங்களில் அறிவிக்கப்படும் தேதிகளில் கால் மற்றும் வாய் நோய் தடுப்பூசி போடப்படும். இம்முகாம்களுக்கு வரும் கால்நடை உரிமையாளர்கள் தங்களின் ஆதார் எண் மற்றும் கைபேசி எண் ஆகியவற்றை கண்டிப்பாக தடுப்பூசி குழுவினிடம் வழங்க வேண்டும். பின்னர் கால்நடைகளுக்கு காதுவில்லைகள் அணிவிக்கப்பட்டவுடன் தடுப்பூசி போடப்படும். எனவே, கால்நடை வளர்ப்போர் மேற்படி தடுப்பூசியை தங்கள் கால்நடைகளுக்கு போட்டுக்கொண்டு பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் தெரிவித்தார்.

தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர் கால்நடை வளர்ப்போருக்கு தாதுஉப்பு கலவைகளை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், கால்நடைபராமரிப்புத்துறை இணை இயக்குநர் மரு.மோகன் குமார், ஆவின் பொது மேலாளர் மரு.சிவக்குமார், கால்நடை பராமரிப்பு துறை துணை இயக்குநர் மரு.ராமகிருஷ்ணன், உதவி இயக்குநர்கள் மரு.மகேந்திரன், மரு.ரவிசந்திரன், கால்நடை மருத்துவர்கள் மரு.ரமேஷ், மரு.ஆர்.ரமேஷ், கால்நடை உதவி மருத்துவர்கள் மரு.ராஜி, மரு.திருமுருகன், மரு.சுரேஷ், மரு.புவனேஸ்வரி, ஆவின் துணை பொது மேலாளர் மரு.குமரன், வட்டார வளர்ச்சி அலுவலர் .சரவணன், கால்நடை ஆய்வாளர்கள் .சின்னசாமி, .முனியப்பன், கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் .டேவிட்ராஜ், .மாது, .மீனாட்சி, முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் .நாகராஜன், .மகேந்திரன் மற்றும் கால்நடை வளர்ப்போர் கலந்து கொண்டனர்.



2026 ஆண்டு தின தமிழ் தினசரி காலை நாளிதழ் மாத நாள்காட்டியினை திருப்பூர் மாவட்ட ஆட்சியர் மணிஷ் நாராயணவரேயிடம் வழங்கி புத்தாண்டு வாழ்த்துக்கள் தெரிவித்தார் திருப்பூர் மாவட்ட நிருபர் முகமது கௌஸ்.

# இண்டூரில் குப்பை கழிவுகளை சுத்தம் செய்த தருமபுரி சட்டமன்ற உறுப்பினர் எஸ். பி. வெங்கடேஸ்வரன் !



தருமபுரி, டிசம்பர். 30-

தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளி ஒன்றியம் இண்டூர் ஊராட்சிக்கு உட்பட்ட இண்டூர் மற்றும் அதை சுற்றி உள்ள பகுதிகளில் குப்பை கழிவுகளை ஊராட்சி நிர்வாகம் முறையாக சுத்தம் செய்யவில்லை. ஊர் பொதுமக்கள் பலமுறை ஊராட்சி நிர்வாகத்தில் முறையிட்டும் நடவடிக்கை எடுக்கவில்லை. இதை தொடர்ந்து தருமபுரி சட்டமன்ற உறுப்பினரிடம் தெரிவித்தனர். அவரும் ஊராட்சி நிர்வாகத்துடன் தெரிவித்தும் இதுவரை குப்பைக்கழிவுகளை நிர்வாகம் அகற்ற வில்லை. அந்தப் பகுதிகளில் துர்நாற்றம் வீசி வந்த நிலையில் தருமபுரி சட்டமன்ற உறுப்பினர் எஸ். பி. வெங்கடேஸ்வரன் மற்றும் பாட்டாளி மக்கள் கட்சியினர் நேரில் சென்று குப்பை கழிவுகளை அகற்றும் பணியில் ஈடுபட்டனர்.

# குழந்தைகள் மற்றும் பெண்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி !



திண்டுக்கல், டிச.30-

திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை அருகே காமலாபுரம் கிராமத்தில் குழந்தைகள் மற்றும் பெண்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி கெல்ப்ஸ் (Helps) தொண்டு நிறுவன இயக்குனர் மரிய ஜான் கிரிஸ்டோபர், மேலாளர் சுமதி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர்களாக மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் சக்திவேல்,181 சேவை மையத்திலிருந்து செல்வி ஹரிணி, அனைத்து மகளிர் காவல் நிலைய காவல்துறை அதிகாரி மேனகா, துணை வட்டாட்சியர் கல்பனா, அங்கன்வாடி ஆசிரியர் சோபனா, ஊராட்சி மன்ற செயலர் சிவராமன், ஊர் நாட்டாமை சகாயராஜ், கிராம முக்கியஸ்தர் சேவியர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.குழந்தைகள் பாதுகாப்பு, குழந்தைகளின் உரிமைகள் மற்றும் அவசர உதவி எண் 1098 குறித்தும் ,"குழந்தைகளுக்கு அன்பு கரங்கள்" திட்டம் பற்றியும், எடுத்துரைத்தனர்.

இந்நிகழ்ச்சியை ஒருங்கிணைப்பாளர், இந்திரா, கிருத்திகா, பூங்கொடி ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

# கந்திகுப்பம் ஸ்ரீபைரவர் திருக்கோவிலில் கர்நாடக மாநில ஸ்ரீபிரவாணந்தபுரி மஹா சுவாமிகள் வழிபாடு



கிருஷ்ணகிரி, டிசம்பர். 30-

கிருஷ்ணகிரி மாவட்டம் கந்திகுப்பம் கிராமத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற ஸ்ரீபைரவர் திருக்கோவில் அமைந்துள்ளது. இந்த திருக்கோவிலில் வளர்பிறை அஸ்டமியையொட்டி சிறப்பு பூஜை நடைப்பெற்றது. இந்நிலையில் ஆன்மிக சுற்றுபயணம் மேற்கொண்டுள்ள கர்நாடகா மாநிலம் சிவானாபுரம் பகுதியை சேர்ந்த ஸ்ரீஆதிசத்திமஹா சமஸ்தான மடத்தின் ஸ்ரீபிரவானந்தபுரி மஹாசுவாமிகள் கிருஷ்ணகிரியில் உள்ள இந்த திருக்கோவிலுக்கு வருகை தந்தார். அவருக்கு கிழக்கு மாவட்ட காங்கிரஸ் துணைத்தலைவர் பி.சி.சேகர் தலைமையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. பின்னர் கந்திகுப்பம் ஸ்ரீபைரவா திருக்கோவிலில் உலக நன்மை வேண்டி நடைப்பெற்ற இந்த சிறப்பு பூஜையில் ஸ்ரீ பிரவானந்தபுரி மஹா சுவாமிகள் கலந்துக் கொண்டு ஸ்ரீ பைரவா திருக்கோவிலில் வளாகத்தில் அமைந்துள்ள ஸ்ரீவினாயகர், ஸ்ரீமுருகன், அருள்மிகு திரிபுரி பைரவி அம்பாள், ஸ்ரீகால பைரவர் மற்றும் சிவலிங்கத்திற்கு அபிஷேக ஆராதனை மற்றும் அலங்காரப் பூஜைகள் நடைப்பெற்றது.

தொடர்ந்து திருக்கோவிலில் உலக மக்கள் யாவரும் நலமுடன் வாழவும், நாட்டில் நல்ல மழை பெய்து விவசாயம் செழித்திட வேண்டியும், சிறப்பு பூஜைகள் நடைப்பெற்றது. கந்திகுப்பம் ஸ்ரீபைரவா திருக்கோவில், பைரவா சுவாமிகள் தலையில் நடைப்பெற்ற இந்த பூஜையில் தமிழகம், ஆந்திரா, கர்நாடகா ஆகிய மூன்று மாநிலங்களிலும் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு ஸ்ரீபைரவ சுவாமியை வழிப்பட்டனர். இதனைத் தொடர்ந்து ஸ்ரீபிரவானந்தபுரி மஹா சுவாமிகள் மற்றும் அவருடன் வந்தவர்கள், கிருஷ்ணகிரி பெரிய ஏரிக்கரையில் அமைந்துள்ள ஸ்ரீகால பைரவர் திருக்கோவில், சூரண்குட்டை கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீசொர்ணாகர்ஷண பைரவர் திருக்கோவில் மற்றும் மாரியம்மன் திருக்கோவில் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் உள்ள திருக்கோவில்களில் நடைப்பெற்ற வளர்பிறை அஸ்டமி பூஜையில் கலந்துக் கொண்டு பூஜைகள் செய்து வழிப்பட்டனர்.

# ஜனவரியில் 11 நாள் லீவு

**சென்னை,டிச.30–**

**2026–ம் ஆண்டு தொடங்க உள்ள நிலையில் புத்தாண்டில் ஜனவரி மாதத்தில் மட்டும் பள்ளி மாணவர்களுக்கு 11 நாட்கள் விடுமுறை வருகிறது. ஜனவரி 15–ந்தேதி முதல் பொங்கல் பண்டிகை விடுமுறை தொடங்குகிறது. 15–ந்தேதி பொங்கல், 16–ந்தேதி திருவள்ளுவர் தினம், 17–ந் தேதி சனிக்கிழமை உழவர் தினம், ஞாயிறு விடுமுறை தினம் என தொடர்ந்து 4 நாட்கள் விடுமுறை கிடைக்கிறது. பின்னர் குடியரசு தினத்தையொட்டி தொடர்ந்து 3 நாட்கள் விடுமுறை வருகிறது. ஜனவரி மாதத்தில் மட்டும் 11 நாட்கள் விடுமுறை வருவதால் மாணவ– மாணவிகள் உற்சாகம் அடைந்துள்ளனர். இந்த விடுமுறை அனைத்து அரசு அலுவலர்கள், வங்கி ஊழியர்களுக்கும் பொருந்தும்.**

# ஓலா எஸ் ஒன் ப்ரோ 4680 பாரத் செல் பேட்டரி ஓலா பைக் அறிமுகம் மற்றும் விற்பனை துவக்கம்



கோயம்புத்தூர், டிசம்பர். 30-

கோவை காந்திபுரம் சத்திசாலை பகுதியில் ஓலா பிரத்யோக விற்பனை மையத்தில் எஸ்ஒன் ப்ரோ4680 பாரத் செல் பேட்டரி வசதியுடன் கூடிய ஓலா ஸ்கூட்டர் அறிமுகம் மற்றும் விற்பனை துவக்கம் விழா நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஓலா ஏரியா மேனேஜர் ஸ்ரீராம் ஷோரூம் மேனேஜர் சந்தோஷ் ,புதிய ஓலா ஸ்கூட்டர் நவீன தொழில்நுட்பத்தில் உருவான பேட்டரியுடன் கூடிய சாவியை வாடிக்கையாளர்களுக்கு வழங்கி விற்பனை தொடக்கி வைத்தனர்.அதனைத் தொடர்ந்து பதிய ஸ்கூட்டர் குறித்து கூறியதாவது.

கோயம்புத்தூர், கொச்சி மற்றும் ஹைதராபாத் முழுவதும் டெலிவரிகளைத் தொடங்கியது, மேலும் பெங்களூருவில் தொடர்ந்து ரேம்ப்-அப் தொடர்கிறது. S1 Pro+ (5.2 kW-h) என்பது நிறுவனத்தின் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட 4680 பாரத் செல் பேட்டரி பேக் மூலம் இயக்கப்படும் முதல் தயாரிப்பு ஆகும், இது அதிக வரம்பு, அதிக செயல்திறன் மற்றும் மேம்பட்ட பாதுகாப்பை வழங்குகிறது.

வாகனங்களில் அதன் சொந்த 4680 பாரத் செல் பேட்டரி பேக்குகள் மூலம், ஓலா எலெக்ட்ரிக் இப்போது செல் மற்றும் பேட்டரி பேக் உற்பத்தி செயல்முறையை முழுமையாக சொந்தமாக வைத்திருக்கும்.

இந்தியாவின் முதல் நிறுவனமாகும், இது இந்தியாவில் முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்ட மின்சார வாகன சுற்றுச் சூழல் அமைப்பை உருவாக்குவதில் ஒரு முக்கிய மைல்கல்லைக் குறிக்கிறது.

இதுகுறித்து ஓலா எலெக்ட்ரிக் நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் கூறுகையில், "எஸ் 1 ப்ரோ + க்கான தேவை இந்தியாவில் தயாரிக்கப்பட்ட உலகத் தரம் வாய்ந்த எலெக்ட்ரிக் வாகன தொழில்நுட்பத்தை நாங்கள் உருவாக்க திட்டமிட்டதை நிரூபித்துள்ளது.

வாடிக்கையாளர்கள் இப்போது எங்கள் சொந்த 4680 பாரத் செல் மூலம் இயக்கப்படும் ஸ்கூட்டர்களின் டெலிவரிகளை எடுத்துக்கொள்கிறார்கள், மேலும் வெளியீடு வலுவான வேகத்தை எடுத்து வருகிறது. டெலிவரிகள் பல இடங்களில் அளவிடப்படுவதால். நகர் மற்றும் ஊரகப்பகுதியில் ஒரு பேட்டரி மூலம் 300 கிலோமீட்டர் பயணிக்கலாம். அனைத்து பாதுகாப்பு வசதிகளும் புதிய வாகனத்தில் இடம்பெற்றுள்ளன என தெரிவித்தார்.

# விளாத்திகுளத்தில் த.வெ.க மாவட்ட செயலாளருக்கு பட்டாசுகள் வெடித்து கட்சியினர் அமோக வரவேற்பு !



**விளாத்திகுளம், டிசம்பர். 30–**

**தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் கடந்த சில தினங்களுக்கு முன்பு தூத்துக்குடி மாவட்டத்தில், மாவட்டம், தொகுதி மற்றும் ஒன்றிய அளவில் த.வெ.க நிர்வாகிகள் மற்றும் பொறுப்பாளர்களை நியமனம் செய்து பெயர் பட்டியலை வெளியிட்டார். இதன் தொடர்ச்சியாக தூத்துக்குடி மாவட்டத்தின் பல பகுதிகளில் த.வெ.க கட்சியினரிடையே, நிர்வாகிகள் அறிமுகக்கூட்டங்கள் நடைபெற்று வருகிறது. இதன் ஒரு பகுதியாக தூத்துக்குடி வடகிழக்கு மாவட்டம் சார்பில் விளாத்திகுளத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் கட்சி நிர்வாகிகள் அறிமுகக்கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. இக்கூட்டத்தில் கலந்து கொண்ட தூத்துக்குடி வடக்கு மாவட்ட செயலாளர் பாலசுப்பிரமணியன் மற்றும் வடகிழக்கு மாவட்ட செயலாளர் மகேஸ்வரனுக்கு கட்சியினர் ட்ரம்ஸ் வாத்தியங்கள் முழங்க பட்டாசுகள் வெடித்தும், மலர்கள் தூவியும் அமோக வரவேற்பளித்தனர். பின்னர் கட்சியினரிடம் பேசிய மாவட்ட செயலாளர்கள், விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நகர மற்றும் ஒன்றிய நிர்வாகிகளை கட்சியினரிடைய அறிமுகம் செய்து நிர்வாகிகளுடன் இணைந்து முழு ஒத்துழைப்புடன் கட்சி பணியாற்ற வேண்டுகோள் விடுத்தனர்.**

**இக்கூட்டத்தில் தூத்துக்குடி வடகிழக்கு மாவட்ட இணைச் செயலாளர் காசிராம், பொருளாளர் பாலகிருஷ்ணன், துணைச் செயலாளர்கள் எபனேசர், முருகேஸ்வரி, ஒன்றிய செயலாளர்கள் செண்பக கனி, விஜயகுமார், தங்க மாரியப்பன், வீரபாண்டி, சின்னச்சாமி,விஜயகுமார், நகர பொறுப்பாளர் முத்துராமலிங்கம்சேது, உள்ளிட்ட சுமார் 400க்கும் மேற்பட்ட தமிழக வெற்றி கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் என பலர் கலந்து கொண்டனர்.**


## பொது அறிவிப்பு

**வருவாய் கோட்ட அலுவலகம், பட்டுக்கோட்டை**
**ந.க.4455 /2025/அ 5 நாள்: 24.12.2025**

**ஜெயவேல் த/பெ.திருகண்ணன், கோட்டை அல்லா கோவில் தெரு, பட்டுக்கோட்டை , தஞ்சாவூர் மாவட்டம்.**

**–மனுதாரர்**

**இல்லை**

**–எதிர் மனுதாரர்**

**அறிவிப்பு**

**தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம். மேற்படி முகவரியில் வசிக்கும் ஜெயவேல் முருகன் ஆகிய நான் கொடுக்கும் அறிவிப்பு என்ன வென்றால், எனது தாயார் வள்ளியம்மாள் க/பெ. திருகண்ணன் என்பவர் கடந்த 01.02.1990 ஆண்டு தேதியன்று மேற்படி முகவரியில் இறந்து விட்டார். அவரது இறப்பை எனது அறியாமையினாலும், கவனக் குறைவினாலும் அந்நேரத்தில் பதிவு செய்ய தவறி விட்டேன். எனவே தற்போது கால தாமதக் கட்டணத்துடன் பதிவு செய்ய உத்தரவிட வேண்டுமாய் பட்டுக்கோட்டை, வருவாய் கோட்டாட்சியர் முன்பு மனு செய்திருந்தேன். அம்மனு விசாரணையில் உள்ளது. இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இவ்வறிவிப்பு பிரதி வெளியான நாள் முதல் 15 நாட்களுக்குள் கனம் பட்டுக்கோட்டை, வருவாய் கோட்டாட்சியர் முன்பு ஆஜராகி ஆட்சேபனையை தெரிவிக்க வேண்டியது. தவறினால் மனு அனுமதிக்கப்படும் என்பதை அறியவும்.**

**மனுதாரர் ஜெயவேல் முருகன்.**

## பொது அறிவிப்பு

**தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், சூரப்பள்ளம் கிராமத்தில் கதவு எண் 61பி ல் வசிக்கும் எனது கட்சிக்காரர் த. கருணைவேல் த/பெ . தங்கமுத்து அவர்களிடம் பெற்ற தகவலின்படி 09–12–2025 (செவ்வாய்) அன்று காலை திருச்சி ஜோசப் கண் மருத்துவமனைக்கு செல்லும்போது அவர் கணக்கு வைத்திருக்கும் கனரா வங்கிக் கிளையின் எமது கட்சிக்காரர் கையெழுத்திட்டு நிரப்பப்படாத காசோலைகள் மூன்றும் (084136, 084137, 084138)** (IFSC CODE CNRB0016342) **அதனுடன் சேர்ந்து முத்திரை ஒட்டி கையெழுத்திட்ட 6 பிராமிசரி தனித்தாள்களும் மற்றும் எனது கட்சிக்காரர் கையெழுத்திட்ட மூன்று 100 ரூபாய் பத்திரங்களும் சேர்ந்து மொத்தமாக பையுடன் தொலைந்துவிட்டது. இதை கண்டதும் எடுத்து கொடுப்பவர்களுக்கு தக்க சன்மானம் வழங்கப்படும், மீறி பணம் பறிக்கும் நோக்கில் சமூக விரோத குற்ற செயல்களில் ஈடுபட்டால் அது எமது கட்சிக்காரரை கட்டுப்படுத்தாது என்பதையும் மேலும் தவறான நோக்கத்தோடு அதை பயன்படுத்துபவர்கள் நீதிமன்ற குற்றவியல் வழக்குகளையும். அதற்குண்டான தண்டனைகளையும் பெற வேண்டும் என்பதை எமது கட்சிக்காரர் சார்பாக இந்த பொது அறிவிப்பின் மூலம் அறியவும்.**

**இடம்: பட்டுக்கோட்டை**
**நாள் : 29–12–2025.**

**இப்படிக்கு**
**த.சங்கர்** B.Sc., B.L.,
**பட்டுக்கோட்டை.**


## முதியவர் மீது தாக்குதல் நடத்திய வாலிபர் கைது

**களியக்காவிளை, டிச, 30 –**

**படந்தாலுமூடு, மீனச்சல் பகுதியை சார்ந்தவர் தினகரன் (66) இவர் வீட்டு உபயோக பொருட்கள் வாங்கி வாடகைக்கு விடும் தொழில் செய்து வருகிறார். இவர் அதற்கான கடையை பனங்காலை பகுதியில் அமைத்துள்ளார். இந்நிலையில் அதே பகுதியை சார்ந்த அபீஸ் (27) என்பவர் பொருட்கள் வாடகைக்கு எடுத்த வகையில் ரூபாய் கொடுக்கவில்லை. ஆகவே தினகரன் வாடகை ரூபாய் கேட்டுள்ளார். இதில் கோபம் அடைந்த அபீஸ் தினகரனை தாக்கியுள்ளார். இதில் படுகாயம் அடைந்த தினகரனை அப்பகுதியினர் மீட்டு குழித்துறை அரசு ஆஸ்பத்திரியில் சிகிட்சைக்காக அனுப்பி வைத்தனர். இது குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து அபீசை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.**



கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், தாட்கோ சார்பாக, தேன்கனிக்கோட்டை வட்டம், நாச்சிப்பள்ளி கிராமத்தைச் சேர்ந்த .பிரேமா க/பெ.வெங்கடேஷ்க்கு, நன்னிலம் மகளிர் நில உடைமைத் திட்டத்தின் கீழ், ரூ.5 இலட்சம் மானியத்தில் மொத்த தொகை ரூ.15 இலட்சம் வாங்கப்பட்ட நிலத்திற்கான பத்திரத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் வழங்கினார். உடன், மாவட்ட வருவாய் அலுவலர் அ.சாதனைக்குறள், மாவட்ட பொது மேலாளர் தாட்கோ .வேல்முருகன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# முதுகுளத்தூர் ஆற்றுப் பாலம் அருகே பஸ் நிறுத்தத்தில் நிழற்குடை அமைக்க கோரிக்கை



முதுகுளத்தூர், டிசம்பர். 30-

இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூரில் ஆற்றுப் பாலம் அருகே உள்ள பஸ் நிறுத்தத்தில் நிழற்குடை வசதி இல்லாததால் பயணிகள் கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

அபிராமம், செல்வநாயகபுரம், மீனாட்சிபுரம் உள்ளிட்ட சுற்றுப்புற கிராமங்களில் இருந்து பரமக்குடி, மதுரை போன்ற வெளியூர்களுக்கு செல்லும் பயணிகள் இந்த பஸ் நிறுத்தத்தை பயன்படுத்தி வருகின்றனர். ஆனால், தற்போது நிழற்குடை இல்லாத காரணத்தால் அவர்கள் கடும் வெயிலும், மழைக்காலத்திலும் நீண்ட நேரம் நின்று காத்திருக்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.

மூத்த குடிமக்கள், பெண்கள், மாணவர்கள் உள்ளிட்டோர் அதிகமாக பாதிக்கப்படுவதாக பயணிகள் தெரிவிக்கின்றனர். எனவே, சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுத்து, பஸ் நிறுத்தத்தில் நிழற்குடை அமைத்து பயணிகளின் சிரமத்தை குறைக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# போதை மற்றும் உறுப்புதான விழிப்புணர்வு மாரத்தான் போட்டியை முன்னாள் அமைச்சர் தளவாய்சுந்தரம் தொடங்கி வைத்தார்!

இரணியல், டிச.30-

போதை மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத்தை தடுப்பது, கண் தானம், உடல் தானம், ரத்த தானம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மாரத்தான் போட்டி மாடத்தட்டுவிளையில் நடந்தது. வேணாடு அறக்கட்டளை நிறுவன தலைவர் வழக்கறிஞர் ஆன்றோ லீடன்ஸ் தலைமை வகித்தார். செயலாளர் ஆஸ்லின் சூசை மிக்கேல், பொருளாளர் மெனுஷா, ஐவின், தமாக குமரி மத்திய மாவட்ட இளைஞரணி தலைவர் அபிலாஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு விருந்தினராக அதிமுக குமரி கிழக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் தளவாய்சுந்தரம் எம்எல்ஏ கலந்து கொண்டு கொடியசைத்து போட்டியை தொடங்கி வைத்தார். மாடத்தட்டுவிளையில் உள்ள ஒரு தனியார் திருமண மண்டபத்தில் ஓட்டத்தை தொடங்கிய இளைஞர்கள் மணக்கரை 4 வழிச்சாலை, கொன்னக்குழிவிளை, கரிஞ்சான்கோடு, வில்லுக்குறி பாலம் வந்து அங்கிருந்து வில்லுக்குறி குருசடி ஜங்ஷன், கான்வென்ட் சாலை வழியாக மீண்டும் மாடத்தட்டுவிளை வந்தடைந்தனர்.

15 கி.மீட்டர் தூரம் நடந்த இந்த போட்டியில் அருமனை ஆதர்ஷ் முதலிடம் பிடித்து ரூ. 10001, ஆற்றூர் ஜெகன் 2ம் இடம் பிடித்து ரூ. 7001, கிராத்தூர் ஜோஸ் ரூ. 5001 பரிசு பெற்று 3ம் இடத்தையும் பிடித்தனர். தொடர்ந்து நடந்த விழாவில் முன்னாள் அமைச்சர் பச்சைமாய் கலந்து கொண்டு வெற்றி கோப்பை மற்றும் ரொக்கப் பரிசுகளை வழங்கினார். அதிமுக முன்னாள் மாவட்ட செயலாளர் சிவ செல்வராஜன், குமரி கிழக்கு மாவட்ட அதிமுக மகளிர் அணி செயலாளர் ஹெப்சிபாய், அதிமுக நிர்வாகிகள், பொதுமக்கள், இளைஞர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம், சக்கிமங்கலம் ஊராட்சியில் ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கம் அமைக்கப்பட்டு வரும் கட்டுமான பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன்குமார் ஆய்வு செய்து பார்வையிட்டார்.

# சூரன்குட்டை மாரியம்மன் திருக்கோவில் சத்தி மாலை அணியும் விழா ஸ்ரீ பிரவாணந்தபுரி மஹா சுவாமிக்கு கிராம மக்கள் சிறப்பான வரவேற்பு



கிருஷ்ணகிரி, டிச.30-

கிருஷ்ணகிரி அருகே உள்ள சூரண் குட்டை கிராமத்தில் அமைந்துள்ள கிராம தேவதையான ஸ்ரீ மாரியம்மன் திருக்கோவிலில் சத்தி மாலை அணியும் விழா நடைபெற்றது. இந்த விழாவிற்கு கர்நாடகா மாநிலம் சிவானாபுரம் பகுதியை சேர்ந்த ஸ்ரீ ஆதி சத்திமஹா சமாஸ்தான மடத்தின் ஸ்ரீ பிரவானந்தபுரி மஹா சுவாமிகள் வருகை தந்தார். அவருக்கு சூரன்குட்டை கிராமத்தை சேர்ந்த ஊர் கவுண்டர்கள் மற்றும் கிழக்கு மாவட்ட காங்கிரஸ் துணைத்தலைவர் பி.சி.சேகர் ஆகியோர் தலைமையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. பின்னர் ஸ்ரீ மாரியம்மனுக்கு ஸ்ரீ பிரவானந்தபுரி மஹா சுவாமிகள் சிறப்பு பூஜைகள் செய்து வழிப்பட்டார். இதனைத் தொடர்ந்து ஸ்ரீ பிரவானந்தபுரி மஹா சுவாமிகள் சத்திகளுக்கு மாலை அணிவித்து அருளாசி வழங்கினார் இந்த சத்தி மாலை அணியும் விழாவில் சூரன்குட்டை, வெண்ணம்பள்ளி மற்றும் அதனை சுற்றியுள்ள பல்வேறு இடங்களில் இருந்து ஏராளமானவர்கள் கலந்துக் கொண்டு வழிப்பட்டனர்.






தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் வட்டம் பாஞ்சாலக்குறிச்சி கிராமத்தில் நுண்ணீர் பாசன திட்டத்தின் கீழ் வாழையில் சொட்டு நீர் பாசனம் அமைக்கப்பட்ட விவசாயிகளை, மத்திய அரசின் ஒருங்கிணைப்பு அலுவலர் கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சகத்தின் இணை செயலாளர் எஸ்.வெங்கடேசபதி, மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத், தலைமையில் செய்தியாளர்களுடன் நேரில் சந்தித்து கலந்துரையாடி களத்தினை பார்வையிட்டார்.

# விருதுநகரில் மக்கள் குறைதீர்க்கும் நாள்



விருதுநகர், டிச.30-

விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்ச்சிமன்றக் கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.என்.ஓ.சுகபுத்ரா தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், இலவச வீட்டுமனைப்பட்டா மற்றும் பட்டா மாறுதல், குடும்பஅட்டை, வேலைவாய்ப்பு, முதியோர், விபத்து நிவாரணம், மாற்றுத்திறனாளிகள், நலிந்தோர் நலத்திட்டம் மற்றும் விதவை உதவித்தொகை, திருமண உதவித்தொகை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக மனுக்கள் பெறப்பட்டது. மேலும், மாற்றுத்திறனாளிகள் மற்றும் மூத்த குடிமக்களுக்காக அமைக்கப்பட்டுள்ள சிறப்பு அமருமிடத்திற்குச் சென்று, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார். இம்மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் சம்மந்தப்பட்டதுறை அலுவலர்களிடம் ஒப்படைத்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்டார்கள். மேலும் முதலமைச்சர் தனிப்பிரிவு மனுக்கள் மீது தனிக்கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், இலவச வீட்டுமனைப் பட்டா வேண்டி விண்ணப்பித்த சாத்தூர் வட்டத்தைச் சேர்ந்த 4 பயனாளிகளுக்கு ரூ.2.23 இலட்சம் மதிப்பிலான இலவச வீட்டு மனை பட்டாக்களையும், விருதுநகர் குடிமைப்பொருள் வழங்கல் பிரிவு துறையின் சார்பில், 4 பயனாளிகளுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.என்.ஓ.சுகபுத்ரா வழங்கினார். மேலும், உலக மாற்றுத்திறனாளிகள் தினம்-2025ஐ முன்னிட்டு, மாற்றுத்திறனாளி மாணவர்களிடையே நடத்தப்பட்ட ஓவியப் போட்டியில் வெற்றி பெற்ற 27 மாணவர்களுக்கு மொத்தம் ரூ.16,500/- பரிசுத்தொகைகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார். மேலும், விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டை வட்டம் கங்காரக்கோட்டை, இ.மேட்டுர் கிராம ஊராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து தீ விபத்து காரணமாக பணியிடை மரணமடைந்த திருமதி முத்துமுனியம்மாள் என்பவரின் வாரிசுதாரரான கணவர் மூக்காண்டி என்பவருக்கு முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து வரப்பெற்ற தொகை ரூ.1 இலட்சத்திற்கான காசோலையினை மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார். இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி ஆனந்தி, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) காளிமுத்து, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் பிரதௌஸ் பாத்திமா, அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக சிறப்பு மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், மாற்றுத்திறனாளிகளிடம் இருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டு அதற்கு தீர்வுக்கான சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் உத்திரவிட்டார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சுரேஷ், துணை ஆட்சியர் (பயிற்சி) செல்வி. செ.சண்முக பிரீத்தா, தனித் துணை ஆட்சியர் (சபாதி) திரு.பாலமுருகன், மாற்றுதிறனாளிகள் நல அலுவலர் சீனிவாசன், மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்

# திருமணம் ஆகாத விரக்தியில் வாலிபர் விஷம் குடித்து தற்கொலை

சுசீந்திரம்.டிச.30-

சுசீந்திரம் அருகே உள்ள காக்கமூர் வடக்கு தெருபகுதியில் வசித்து வருபவர் கண்ணன் 33 இவர் வெளிநாட்டில் பாய்லர் ஆபரேட்டராக வேலை செய்து வருகிறார் தற்போது விடுப்பில் தனது ஊருக்கு வந்துள்ளார் இவருக்கு பல்வேறு இடங்களில் பெண் பார்த்து வந்துள்ளனர் ஆனால் இவருக்கு திருமணம் செய்ய பெண் அமையவில்லை இதனால் மன விரக்தியில் இருந்து வந்துள்ளார் கடந்த 21ஆம் தேதி காக்கமூர் ஊரில் உள்ள தனது தந்தையின் வீட்டில் விஷம் அருந்தி மயங்கிய நிலையில் கிடந்துள்ளார் அவரை மீட்டு நாகர்கோவில் தனியார் மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தனர் தீவிர சிகிச்சை பிரிவு இருந்த கண்ணன் 27 ஆம் தேதி இரவு பரிதாபமாக உயிரிழந்தார் இது குறித்து அவரது சகோதரி ஈஸ்வரி சுசீந்திரம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார் புகாரின் பேரில் சுசிந்திரம் காவல்துறையினர் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்

# சுசீந்திரம் தாணு மாலைய சுவாமி கோவிலில் கருடன் சுவாமிகளை சுற்றி வலம் வரும் நிகழ்ச்சி



சுசீந்திரம்.டிச.30-

சுசீந்திரம் தாணு மாலைய சுவாமி கோவிலில் ஐந்தாம் திருவிழாவன்று கருடன் சுவாமிகளை சுற்றி வலம் வரும் நிகழ்ச்சி நடைபெற்றது

புகழ்பெற்ற சுசீந்திரம் தாணுமாலைய சுவாமி கோவிலில் கடந்த 25ஆம் தேதி கொடியேற்றத்துடன் மார்கழி பெருந்திருவிழா துவங்கி ஐந்தாம் திருவிழாவான இன்று காலை 5:00 மணிக்கு ரிஷப வாகனத்தில் சுவாமியும் கருட வாகனத்தில் பெருமாளும் அன்ன வாகனத்தில் அம்பாளும் திருவீதி உலா வரும் பஞ்ச மூர்த்தி தரிசனம் நிகழ்ச்சி நடைபெற்றது காலை 6:00 மணி அளவில் தாணுமாலய சுவாமி கோவில் தெற்கு பாகத்தில் அமைந்துள்ள வீர மார்த்தாண்ட விநாயகர் கோவில் முன்பு சுவாமி அம்பாள் பெருமாள் கிழக்கு திசை நோக்கி நிற்க கருடன் காலை 6.10 மணி அளவில் சுவாமியையும் கோபுரத்தையும் மூன்று முறை சுற்றி வலம் வந்தது அப்போது பக்தர்கள் பக்தி கோஷங்கள் எழுப்பி கருடனை தரிசித்தனர் பின்பு சுவாமிகளுக்கு தீபாரதனை காட்டப்பட்டது மீண்டும் மேழ தாளங்கள் முழங்க சாமி விக்கிரகங்கள் கோவிலுக்குள் சென்றது காலை 10:30 மணிக்கு சுவாமிகளுக்கு சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது மாலை 5 மணிக்கு ஊஞ்சல் மண்டபத்தில் வைத்து சுவாமிக்கு அஷ்டபிஷேகம் மண்டகப்படி நடைபெறுகிறது இரவு 10:30 மணி அளவில் ரிஷப வாகனத்தில் சுவாமி திருவீதி உலா வரும் நிகழ்ச்சி நடைபெறுகிறது 6 ஆம் திருவிழாவான நாளை காலை 9 மணிக்கு பூங்கோயில் வாகனத்தில் சுவாமி திருவீதி உலா வரும் நிகழ்ச்சியும் காலை 10:30 மணிக்கு சுவாமிகளுக்கு சிறப்பு அபிஷேகமும் இரவு 10 மணி அளவில் இந்திர வாகனத்தில் சுவாமி திருவிதி உலா வரும் நிகழ்ச்சியும் நடைபெறுகிறது ஏழாம் திருவிழாவான 31ஆம் தேதி காலை 5 மணிக்கு பல்லக்கு வாகனத்தில் சுவாமியும் அம்பாளும் பெருமாளும் திருவீதி உலா வரும் நிகழ்ச்சியும் இரவு 10:30 மணிக்கு அலங்கரிக்கப்பட்ட கைலாச பர்வத வாகனத்தில் சுவாமி அம்பாள் வலம் வரும் நிகழ்ச்சி நடைபெறுகிறது சுவாமி வாகனங்களில் மிகவும் பெரிய வாகனமாக கைலாச பருவத வாகனம் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது எட்டாம் திருவிழாவான ஒன்றாம் தேதி காலை 5:00 மணிக்கு சிதம்பரேஸ்வரர் திருவீதி உலாவரும் நிகழ்ச்சியும் காலை 10:30 மணிக்கு அஷ்ட அபிஷேகமும் மாலை நாலு மணிக்கு நடராஜ பெருமானுக்கும் சிவகாமி அம்பாளுக்கும் அலங்கார மண்டபத்தில் வைத்து அஷ்டாபிஷேகம் நடைபெறுகிறது ஒன்பதாம் திருவிழாவான இரண்டாம் தேதி காலை நாலு மணிக்கு கங்காள நாதர் பிடசாடனராக திருவிதிஉலாவரும் நிகழ்ச்சியும் காலை 9 மணிக்கு அலங்கரிக்கப்பட்ட விநாயகர் தேரில் விநாயகரும் சுவாமி தேரில் சுவாமியும் அம்பாள் தேரில் அம்பாளையும் அமரச் செய்து வடம் தொட்டுஇளுக்கும் தேரோட்ட நிகழ்ச்சி நடைபெறுகிறது 12 மணிக்கு தனது தாய் தந்தையர்கள் விழாவில் பங்கெடுத்துக் கொள்ள வந்த விநாயகர் முருகர் தனது தாய் தந்தையர்களை பிரிந்து செல்லும் சப்தா வர்ண காட்சி நிகழ்ச்சியும் நடைபெறுகிறது பத்தாம் திருவிழா அன்று காலை நாலு மணிக்கு ஆருத்ரா தரிசனமும் இரவு 9:30 மணிக்கு திரு ஆராட்டுநிகழ்ச்சியும் நடைபெறுகிறது விழா ஏற்பாடுகளை கோவில்களின் இணை ஆணையர் ஜான்சி ராணி கோவில் கண்காணிப்பாளர் ஆனந்தன் கோவில் மேலாளர் ஆறுமுகதரன் கணக்கர் கண்ணன் கோவில் பக்தர்கள் பொதுமக்கள் இணைந்து செய்து வருகின்றனர்

# திருவெண்ணெய்நல்லூர் நகரத்தில் பூத் என் - 325, 326ல் என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி நிகழ்ச்சி - பூக்கடை கணேசன் தலைமையில் நடைபெற்றது



திருவெண்ணெய்நல்லூர், டிச.30-

திருவெண்ணெய்நல்லூர் நகர திமுக சார்பில் பூத் என் 325,326-ல் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி நிகழ்ச்சி நகர செயலாளர் பூக்கடை கணேசன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் பி.எல்.சி., முகவர்களின் கையேடுகளை ஆய்வு செய்து, பின்னர் முதலமைச்சர் ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசின் மக்கள் நல திட்டங்களை பொதுமக்களுக்கு எடுத்துக்கூறினார். மேலும் வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலில் மீண்டும் தமிழகத்தில் ஸ்டாலின் தலைமையின் அரசு அமைய நிர்வாகிகள் முழுமையாக பாடுபட வேண்டும் என கேட்டுக்கொண்டார். தொடர்ந்து தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டோம் என்ற பேட்ஜ் நிர்வாகிகளுக்கு அணிவித்து செல்போன்களுக்கு ஸ்டிக்கர் ஒட்டப்பட்டது. இதில் கிருஷ்ணராஜ், ராஜாராம், வழக்கறிஞர் வழக்கறிஞர் கார்த்திகேயன், தில்லை.காமராஜ், பாக்யராஜ், அய்யனார், பழக்கடை அய்யனார், கோபு, பழனி, கண்மணி, முருகன், ரமேஷ், லட்சுமி, கலைச்செல்வி, சிறுவா.மணி, சிவப்பு செல்வம், உள்ளிட்ட வார்டு செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

தின தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்!

# குமரி மாவட்ட பாஜக ஊடக பிரிவு சார்பாக முன்னாள் பிரதமர் வாஜ்பாய் பிறந்தநாள் விழா



நாகர்கோவில், டிச. 30-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட பாஜக ஊடகப்பிரிவு தலைவர் சந்திரசேகர், தலைமையில் நாகர்கோயில் பாஜக மாநகர தலைவர் கவுன்சிலர் சதீஷ் மற்றும் மாவட்ட ஊடகப்பிரிவு நிர்வாகிகள் பிரேம் ஆனந்த்,மதன்பெல்,அருள் குமார்,காசி விஸ்வநாதன்,சதீஷ்குமார்,ஜெனோ,விக்னேஷ் ஆகியோர் முன்னிலையில் நாகர்கோவில் புன்னைநகர், ஹௌசிங்போர்டு அருகில் வைத்து வாஜ்பாய் திரு உருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்த பட்டது.பின்னர் தூய்மை பணியாளர்கள் கௌரவிக்கப்பட்டு அவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து நாகர்கோவில் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் ஆதரவற்று சாலையோரங்களில் இருப்பவர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் பாஜக கிழக்கு மாவட்ட தலைவர் கோபகுமார், நாகர்கோவில் சட்டமன்ற உறுப்பினர் எம்.ஆர் காந்தி, நாகர்கோவில் சட்டமன்ற பொறுப்பாளர் தேவ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். உடன் மாவட்டத் துணைத் தலைவர் மணிசுவாமி, செயலாளர் ராஜன், மதி, இளைஞரணி தலைவர் அபிஷேக் வர்த்தக பிரிவு தலைவர் ஸ்ரீ செல்வன் ஜாக்சன், வேனு கிருஷ்ணன் மகளிர் அணி பொதுச் செயலாளர் திவ்யா சிவராம் பொருளாதார பிரிவு செயலாளர் விஜி மற்றும் அனிதா, உமா , அருண் சகாதேவன், மகாதேவன், சிவராஜன் ஜெனிபர் மாநகராட்சி கவுன்சிலர் வீர சூர பெருமாள், சுனில்அரசு ஆகியோர் கலந்து கொண்டனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.